**செம்பாக்கம் நகராட்சியில் 30.11.2020ம் நாள் திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணகூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

பொருள் எண்.1

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் நவம்பர் 2020 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.725** பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண்.2

அரசு ஆணை (நிலை) எண்.170 ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் (ம.அதி.3) துறை நாள் 27.10.2020ல் புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் கூடுதல் விவரங்களை சேகரிப்பதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.15/– வீதம் செலவு என்ற அடிப்படையில் படிவம் அச்சிடுதலுக்கு ரூ.5/–ம் , தகவல் சேகரிப்பு பணிக்கு ரூ.5/–ம், சேகரிக்கப்பட்ட தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் பணிக்கு ரூ.5/–ம் செலவினம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில், ஏற்கனவே கணக்கெடுப்பு செய்து பெறப்பட்ட 2946 எண்ணிக்கையிலான பயனாளிகளிடம் கூடுதல் விவரங்களை சேகரிப்பு பணி செய்யவும், அவ்வாறு சேகரிக்கப்பட்ட விவரங்களை அதற்குரிய வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவசர அவசியம் கருதி இப்பணிகளை கணினி பணி செய்யும் நபர்கள் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான மொத்த செலவினம் தொகை ரூ.29460/– ஆகும். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி மேற்கொண்டு தொகை வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.726** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் இருப்பு தாம்பரம் அவர்களின் 2.7.2020ம் தேதியிய வாட்ஸ் ஆப் குறுஞ்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், இந்நகராட்சி கொரோனா பெருந்தொற்று தொடர் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் நகராட்சி பகுதியில் உள்ள வீடுகளுக்கு கொரோனா தடுப்பு ஹோமியோபதி மாத்திரையான **ஆர்சனிக்கம் ஆல்பம் 30** (ARSENICUM ALBUM 30 – HOMEOPATHIC IMMUNE BOOSTER – 1DRAM CONTAINER 40 SIZE PILLS) எனும் மாத்திரைகளை டாக்டர் டி. ஆறுமுகம், (Dr. Aru's Holistic Homoeocare) அவர்களின் மூலம் இரண்டாம் கட்டமாக 4000 எண்ணிக்கை வாங்கி வழங்கிடவும், அவற்றை DBC உதவியுடன் 15 வார்டில் உள்ள மக்களுக்கும் வாங்கி விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டது.

மேலும், இப்பணியினை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15 ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.80000க்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.727 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21ம் ஆண்டு பொது நிதியின் கீழ் 20.11.2020ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | 5.00 | எஸ்.வி.பி எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ராஜலட்சுமி கான்ட்ராக்ட்ஸ் | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 2 | வார்டு எண்.1 முதல் 7 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | 4.50 | எஸ்.வி.பி எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ராஜலட்சுமி கான்ட்ராக்ட்ஸ் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண்.8 முதல் 15 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | 4.50 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஆர்.பி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.728 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் 2020–21ம் ஆண்டு பொது நிதியின் கீழ் 27.11.2020ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்டவேளச்சேரி பிரதான சாலையின் தென்புறம் பகுதியில் அமைந்துள்ள கட்டிடங்களில் உள்ள நச்சு கழிவு நீர் தொட்டியிலிருந்து கழிவு நீரை தனியார் கழிவு நீர் அகற்றும் ஊர்தி மூலம் கழிவு நீர் அகற்றுதல் பணி மற்றும் சுகாதார முறைப்படி தாம்பரம் / பெருங்குடியில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கொண்டு சென்று சேர்த்தல் பணி | 2.50 | என். மணிவன்னன் | குறைவு |
| | | | பி. சதீஷ்குமார் | அதிகம் |
| 2 | செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்டவேளச்சேரி பிரதான சாலையின் வடபுறம் பகுதியில் அமைந்துள்ள கட்டிடங்களில் உள்ள நச்சு கழிவு நீர் தொட்டியிலிருந்து கழிவு நீரை தனியார் கழிவு நீர் அகற்றும் ஊர்தி மூலம் கழிவு நீர் அகற்றுதல் பணி மற்றும் சுகாதார முறைப்படி தாம்பரம் / பெருங்குடியில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கொண்டு சென்று சேர்த்தல் பணி | 2.50 | எம்ஜெஎல். மணவாளன் | குறைவு |
| | | | ஈஎம்.டேனியல் | அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.729** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21ம் ஆண்டு பொது நிதியின் கீழ் 19.11.2020ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ராஜகீழ்பாக்கம் ஏரிக்கரை பகுதியில் அமைந்துள்ள மூன்று பொது கழிவறைகள், வேளச்சேரி சாலையில் அமைந்துள்ள ஒரு பொது கழிப்பறை மற்றும் அம்பேத்கார் தெருவில் அமைந்துள்ள சமுதாய கழிவறை ஆகியவற்றினை பராமரிப்பு செய்தல் பணி. | 6.00 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.730** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் 2020–21ம் ஆண்டு பொது நிதியின் கீழ் 19.11.2020ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ராஜகீழ்பாக்கம் ஏரிக்கரை பகுதியில் அமைந்துள்ள மூன்று பொது கழிவறைகள் மற்றும் வேளச்சேரி சாலையில் அமைந்துள்ள ஒரு பொது கழிப்பறை ஆகியவற்றினை ஒப்பந்த | 9.80 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 0.22% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையில் (Outsourcing) சுத்தம் செய்து, பராமரித்தல் பணி. | | | |

அலுவலக குறிப்பு:

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.731** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.13277/2018/WS1 நாள்: 19.6.2018த்தில் இந்நகராட்சிக்கு 8200 எண்ணிக்கையிலான வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு Internal Plumbing வழங்க நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது. அதன் அடிப்படையில் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணிக்கு ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பொது மக்களிடமிருந்து கூடுதல் தொகையினை ஒப்பந்த பணியாளர்கள் பெறுவதாக புகார் வரப்பெற்றதை தொடர்ந்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வாசகங்கள் அடங்கிய நோட்டீஸ்கள் அ4 அளவில் 10000 எண்ணிக்கை அச்சிட்டு விநியோகம் செய்யவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.13000/–ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், உள்ளூர் நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.732** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
| --- | --- | --- |
| 1 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.9.2020 முதல் 30.9.2020 வரையான காலத்திற்கு இரு எண்ணிக்கையிலான டாடா ஏஸி வாகனத்தில் 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, உயர் அழுத்த மோட்டாருடன் கூடிய ஸ்பேரயர், வண்டி வாடகை, டீசல், இரண்டு நபர்களுக்கான நாள் ஊதியம், ஓட்டுநர் ஊதியம், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ் க்கு வழங்கியது | 672000 |
| 2 | செம்பாக்கம் நகராட்சியின் 7.0 எச்பி மற்றும் 5.0 எச்.பி டீசல் என்ஜின் பம்பு செட் பழுது நீக்கம் செய்தல் பணி மேற்கொண்ட மெஸ்ஸர்ஸ் அருணாச்சசம் இன்பிராஸ்ரக்ஷர் டெவலப்மன்ட் நிறுவனத்திற்கு வழங்கியது | 67937 |
| 3 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.9.2020 முதல் 30.9.2020 வரையான காலத்திற்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆட்டோ மைக் செட் மூலம் விளம்பரம் செய்தது வண்டி வாடகை, எரிபொருள், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராம்தாஸ் வழங்கியது | 54000 |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.733** செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி